TAMIL NADU ... LIBRARY
17 NOV 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1971 மார்ச் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிழக்குக் கோதாவரி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1946-ம் ஆண்டு முதல் 1952-ம் ஆண்டு வரை தமிழ் நாடு சட்டமன்றத்தில் உறுப்பினராகவும், அன்றைய சென்னை மாநிலத்தின் அமைச்சராகவும் இருந்த திரு. பிக்கினி வீராசாமி அவர்கள் 27—11—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்;

தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 21-4-1970-லிருந்து சட்டமன்றத்தின் உறுப்பினராக இருந்த திரு. ஏ. ஆர் சுந்தரராஜன் அவர்கள் 14-12-1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்;

1957-ம் ஆண்டிலிருந்து 1962-ம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி-1 தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்த டாக்டர் இ. பி. மதுரம் அவர்கள் 17-1-1971-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. அறிவிப்புகள்.

(அ) வினா-விடை நேரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)